***கவனிக்க.-*** *2009.03.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1595 - 2009 මාර්තු 27 වැනි සිකුරාදා - 2009.03.27

*1595 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 368 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 369 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, மே மாதம் 07 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, பங்குனி.

### அட்டவணை

| | மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 01 | கேகாலை | மாவனெல்லை | உயனவத்த பிரிவு, கினிகொட கோறளை கல்பொத முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கேகாலை |

3-523

---

திருத்தம்

## பொலிஸ் திணைக்கள பொலிஸ் கான்ஸ்டபிள்/பெண் பொலிஸ் கான்ஸ்டபிள், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி, விசேட அதிரடிப்படையின் பொலிஸ் கான்ஸ்டபிள், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக 2008.12.26 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்த 1582 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணபப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் 2009.03.31 ஆந் திகதி முதல் 03 மாதங்கள் வரை அதாவது 2009.06.30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர்.

3-650

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஆயுள்வேத வைத்திய சேவையின் வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2009

இலங்கை ஆயுர்வேத சேவையிலுள்ள வைத்திய உத்தியோகத்தர் களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் நடாத்தப்பட உள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது. இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

1. ஆயுர்வேத திணைக்களத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதி களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

2. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணபப்பபடிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணபப்படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங் களைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2009.04.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கொடுப்பனவுகளும் இல்லை. அதன் பின் தோற்றுவதற்கு ரூபா 200 பெறுமதியான முத்திரையும், ஒரு பாடத்திற்கு தோற்றுவதற்கு ரூபா 50 பெறுமதியான முத்திரையும் ஒட்டி, அதனை கையொப்பமும் திகதியும் இட்டு அம்முத்திரையை பாவனையற்றதாக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்படமாட்டாது.

3. **பரீசார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுவதற்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

4. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும், அனுமதி அட்டைகளும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு, பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும், பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர், "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்னை, மகரகம" எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர்
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்
(iii) பரீட்சார்த்தியின் முகவரி
(iv) விண்ணப்பம் அஞ்சலிட்ட திகதி, அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம் மற்றும் பதிவு இலக்கம்.

5. **பரீட்சைத் திட்டம்**.- இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவை யாப்புக்கு ஏற்றவாறு அனுமதிக்கப்பட்ட பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நடாத்தப்படும்.-

(I) கணக்கு நடைமுறைகள்.-: கீழ்வருவனவற்றை அடிப்படை யாகக் கொண்டு ஒரு வினாத்தாள் :

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்கு நடைமுறை கள் பகுதி I (X அத்தியாயம் தவிர)

(II) தாபன விதிக்கோவை.- கீழ்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் வினாத்தாள் -

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, தொகுதி I – அத்தியாயங்கள் I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள்; மற்றும்

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் பகுதி II இல் XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

(III) ஆரோக்கியசாலை நிர்வாகம்.- கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் வினாத்தாள் -

(i) ஆரோக்கியசாலை சம்பந்தமாக நடைமுறையில் உள்ள சாதாரண சட்டதிட்டங்கள்
(ii) ஆரோக்கியசாலை சுத்தம்
(iii) நோயாளிகள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள்
(iv) நோயாளிகளுக்கு அவசியமான உணவுகளை பெற்றுக்கொள்ளும் விதிமுறைகள்
(v) மருந்து உற்பத்தி பரிபாலனை
(vi) நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக நடைமுறையில் உள்ள சாதாரண சட்டதிட்டங்கள்
(vii) வைத்தியசாலை வைத்திய அதிகாரி தொடக்கம் துணை அலுவலர் வரையான அவர்களது கடமைகள் தொடர்பாக உள்ள விளக்கம்
(viii) வைத்தியசாலை தொடர்பான சாதாரண நிர்வாகம்
(ix) ஆயுர்வேத திணைக்கள சாதாரண ஒழுங்குவிதிகள்
(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான சட்டதிட்டங்கள்
(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை.

(IV) அரசகரும மொழி வாய்மொழிப் பரீட்சை.- சிங்களம்/தமிழ் (15 நிமிடங்கள்)

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு -

(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடையளித்தல்

(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்

(இ) சிங்களத்தின் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்.

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு –

(அ) சிங்களத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல்

(ஆ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்

(இ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்.

ஆர். பி. டபிள்யு. குணவர்த்தன,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

ஆயுர்வேத திணைக்களம்,
நாவின்ன,
2009.03.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத வைத்திய சேவையின் அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2009**

சுட்டெண் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
சிங்களம் - S, தமிழ் - T
(பொருத்தமான எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக் களில்): Mr./Mrs/Miss :-----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்/ சிங்களத்தில்) (திரு./ திருமதி/செல்வி) :-----.

3. முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.

4. முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்):-----.

5. தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.

7. கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் (தமிழில்/ சிங்களத் தில்) :-----.

8. தற்போதைய பதவி :-
   (i) பதவி :-----.
   (ii) நியமனக் கடித இலக்கம் :-----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :-

| தொடர் இல. | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன் பரீட்சைக்கு கீழ்வரும் பாடத்திற்கோ அல்லது பாடங்களுக்கோ (தமிழில்/ சிங்களத்தில்) தோற்றி சித்தியடைந் துள்ளீர்களா ? :-----.
(நிதிப் பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ ஆரோக்கியசாலை நிர்வாகம்/வாய்மொழிப் பரீட்சை)
அப்படியாயின், சுட்டெண்ணும் திகதியும்) :-----.

11. தாங்கள் பரீட்சைக்கு தோன்றுவது முதற்தடவையா ? :----.
பரீட்சைக்குத் தோன்றுவது முதற்தடவை இல்லாவிடின், ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

முத்திரைக்கூடு:

| |
|---|
| முழுப் பரீட்சைக்காக 200 ரூபாபெறுமதியான முத்திரையும், ஒவ்வொரு பாடத்திற்கும் 50 ரூபா பெறுமதியான முத்திரையும் இங்கே ஒட்டவும் |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும்.

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். இங்கே ஒட்டப்பட்டுள்ள ................. ரூபா பெறுமதியான முத்திரை/முத்திரை கள் செல்லுபடியானவை என்றும் முன்னர் உபயோகிக்கப்படாதவை என்றும் நான் உறுதிமொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன் படுகிறேன்.

....................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி .................................................................. எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

......................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

3-563

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள
வெற்றிடங்களுக்கான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை
ஆளணியினர்க்கான போட்டிப் பரீட்சை – 2009

COMPETITIVE EXAMINATION FOR FILLING VACANCIES IN THE PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE CADRE IN SRI LANKA MISSIONS ABROAD - 2009

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரங்களில் ஏற்பட்டுள்ள உள்ளூர் மட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதி பெறும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைகளி லிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கு இவ்விண்ணப்பதாரர்கள் தோற்ற வேண்டும்.

2. **தகைமை**.– விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I அல்லது II அல்லது மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபை அரச முகாமைத்தவ உதவியாளர் சேவையின் தரம் I அல்லது II இல் இருப்பவராயிருத்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்படாத பிற முகாமைத்துவ சேவைகளில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்;

(ஆ) விண்ணப்பம் முடிவடையும் திகதியன்று 57 வயதுக்குட்பட்ட வராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பம் செய்யும் காலப்பகுதிக்கு முன்னைய ஐந்து வருட காலத்தில் அவ் அவ்வருடத்திற்குரிய சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஈ) எச்சரிக்கை தவிர்த்து, ஒழுக்காற்றுத் தண்டனைகள் எதுவும் பெறாதவராக இருத்தல் வேண்டும் ;

(உ) விண்ணப்பிக்கும் பொழுது இலங்கைத் தூதரகங்களில் பணிபுரிபவராக இருத்தல் ஆகாது.

**குறிப்பு** : I விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் போது தகைமை உள்ளாரெனினும் அதன் பின் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு I இற்கு மேலான ஒரு சேவைக்கு (வகுப்பு/தரம்) பதவியேற்றம் செய்யப்பட்டாலோ அல்லது வேறொரு சேவைக்கு மாற்றப்பட்டாலோ இலங்கை தூதரகங்களுக்கு உள்நாட்டு சேவையால் நிரப்பப்படவுள்ள முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு தகுதியற்றவராவர். அப்படி ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப் பின் அது இப்பகுதி (அ) வின் பிரகாரம் தாக்கம் ஏற்படலாமாகையால் இதைவிட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு அறிவித்தல் கொடுப்பது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

II. நிர்வாகம் மற்றும் கணக்கீட்டு அறிவாற்றல் உள்ளவர்க்கும் ஆங்கிலம் மற்றும் வேறு மொழிகளில் திறனாற்றல் உள்ளவர்க்கும் (எழுத்தும் கதைத்தலும்) முன்னுரிமை வழங்கப்படும். வேலை பார்க்கக்கூடியளவு வெளிநாட்டு மொழிகள் தெரிந்திருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப்பட்டு இதற்கும் முன்னுரிமை கொடுக்கப்படும்.

III. கணனி அறிவு ஒரு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் என்பதுடன் அத்தகைமை பெற்றமையின் திறமைப்பாடுகள் பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

3. **தேர்வு முறை**.–பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை மூலமும் கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சை மூலமும் தேர்வு நடைபெறும்.

3.1 ***எழுத்து மூலப் பரீட்சை***.– கீழே தரப்பட்டுள்ள எழுத்து மூலப் பாடங்கள் ஒவ்வொன்றும் தலா 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

| வினாத்தாள் இலக்கம் | வினாத்தாள் | கால வரை |
|---|---|---|
| 01 | கணக்கீடு | 2 மணித்தியாலம் |
| 02 | தாபன விதிமுறைகளும் அலுவலக நடைமுறைகளும் | 2 மணித்தியாலம் |
| 03 | ஆங்கிலம் | 2 மணித்தியாலம் |
| 04 | பொது அறிவு | 1 மணித்தியாலம் |

**குறிப்பு**.– (1) கணக்கீடு.– அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் கணக்கு முறைகள், கணக்குத் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும்.

(2) தாபன விதிமுறைகளும் அலுவலக நடைமுறைகளும்.–பரீட் சார்த்திகள் தங்களுக்குத் தேவையான வினாக்களைத் தேர்ந் தெடுக்கும் வகையில் இவ்வினாத்தாள் அமைந்திருக்கும் அரசாங்க அலுவலகங் களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும்.

(3) ஆங்கிலம் .– விண்ணப்பதாரியின் ஆங்கில புரிந்துணர்வு மற்றும் எழுத்து மூல தொடர்பாடல் என்பவற்றைப் பரீட்சிப்பதாக இவ் வினாத்தாள் அமைந்திருக்கும்.

(4) பொது அறிவு.– இலங்கையின் அரசியல், சமூக சேவைகள், பாரம்பரியங்கள், பொருளாதாரச் சுற்றாடல் மற்றும் இலங்கை யின் சரித்திரம், புவியியல் அத்துடன் இன்றைய சர்வதேச நிகழ்வுகள் என்பவற்றை அடக்கிய வினாத்தாளாக அமையும்.

3.2 ***நேர்முகப் பரீட்சை:***

3.2.1 நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் 100 என்பதுடன் நேர்முகப் பரீட்சையானது வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும்.

3.2.2 விண்ணப்பதாரர் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 40 புள்ளிகள் பெற வேண்டியதுடன் மொத்தப் புள்ளிகள் 200 அல்லது அதற்கு மேலாக பெறுபவர்களே நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெறுவர். எனினும் போதியளவு விண்ணப்பதாரிகள் மேற்கூறிய புள்ளிகளைப் பெறாதவிடத்து குறைந்த புள்ளிகளைப் பெற்றிருப்போரையும் நேர்முகப் பரீட்சைக்கு வரக்கோரும் உரிமை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு உண்டு.

**4. பதவிக்கமர்த்தும் நியதிகள்:**

4.1 இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் உத்தியோகத்தர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு வருட காலத்திற்கு கொழும்பில் உள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சேவையாற்றல் வேண்டும். இச்சேவைக் காலத்தில் அவரது வேலை மற்றும் நல்லொழுக்கம் என்பன சார்பாக அதிருப்தி காணுமிடத்து அவரது தெரிவு நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு.

4.2 வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரினால் விதிக்கப்படும் விதிகள், நிபந்தனைகளுக்கமைய சாதாரணமாக மூன்று வருடங்கள் வெளிநாட்டில் சேவையாற்ற முடியும் என்பதுடன் அதற்குரிய ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும். இக்காலவரை முடிவுற்றதும் உத்தியோகத்தர் இலங்கைக்கு திரும்பி வரவேண்டும்.

4.3 தெரிவாகும் உத்தியோகத்தர்கள் அப்போது அவர்கள் கொழும்பில் பெறும் நிரந்தர சம்பளத்தை தொடர்ந்து பெறுவார்கள். வெளிநாட்டில் சேவை செய்யும் காலத்தில் வெளிநாட்டுக்கான பணிக் கொடுப்பனவு ஒன்றும் பெறுவர்.

4.4 தெரிவான ஓர் உத்தியோகத்தர் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகமொன்றிற்கு நியமனம் பெறும் பொழுது அங்கு செல்வதற்குரிய மற்றும் திரும்பி வருவதற்குரிய பிரயாணச் செலவுகளை அரசாங்கம் பொறுப்பேற்கும். அங்கு தங்குமிடச் செலவுகள் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். பிற கொடுப்பனவுகள் என்பன அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் இச்சலுகைகள் அவரது வெளிநாட்டுச் சேவைக்காலத்தில் அவரதும், அவரது வாழ்க்கைத் துணை மற்றும் இவரில் தங்கியுள்ள 21 வயதிற்குட்பட்ட இரு பிள்ளைகளுக்கு மட்டுமே ஆகும்.

**5. விண்ணப்பிக்கும் முறை:**

5.1 விண்ணப்பப்பத்திரம் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஏ-4 அளவிலான கடதாசியில் மூன்று பக்கங்களில் முறையே 01 தொடக்கம் 05 வரை முதலாம் பக்கத்திலும் 06 தொடக்கம் 14 வரை இரண்டாம் பக்கத்திலும் மற்றும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் தயாரிக்கப்பட வேண்டும். மாதிரிப் படிவத்தின் படி தயாரிக்கப்படாத மற்றும் தேவைப்படும் தகவல்கள் சரியாகக் கொடுக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களின் படப் பிரதிகளை வைத்திருத்தல் உசிதமானது என விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பம் தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதை விண்ணப்பதாரர்களே திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பத்தைத் தயாரிக்கும் விண்ணப்பதாரர்கள ஆங்கில மொழியிலும் பரீட்சையின் பெயரை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர்கள் இவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்குத் தகுதியுள்ளவரா என்பதுடன் விண்ணப்பத்தில் கூறியிருப்பவை உண்மையானவை என்பதையும் திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவாகும் பட்சத்தில் அவரை தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும் என்பதாகவும் உறுதிப்படுத்த வேண்டும்.

5.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு 2009, ஏப்பிறல் 24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கும்படியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இலங்கை வெளிநாட்டுச் சேவை அரச முகாமைத்துவ உதவியாளர் தேர்வுக்கான பரீட்சை' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**6. பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். இக்கட்டணம் எந்தவொரு தபால் நிலையத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 என்ற கணக்கிற்கு செலுத்தப்பட்டு பெறும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட வேண்டும். பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தொகை மற்றும் செலுத்தப்பட்ட அஞ்சல அலுவலகம் என்பன விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடப்பட வேண்டும். பரீட்சைக்கான கட்டணம் வேறு வகைகளில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டோ அல்லது தபால்/ காசோலைகளோ ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. பற்றுச்சீட்டின் படப்பிரதி ஒன்றை வைத்திருத்தல் சாலச் சிறந்தது. பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

**7.** பூர்த்தி பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தவறி விட்டது அல்லது தாமதமாகி விட்டதென்பதான குற்றச்சாட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**8. பரீட்சைக்கு அனுமதித்தல்.**-

8.1 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்பட மாட்டாது.

8.2 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்பி வைப்பார். பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு உறுதி செய்யப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வை யாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைத்ததற்கான அறிவித்தலொன்று பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரகாரம் விண்ணப்பதாரிகள் எவருக்காவது பத்திரிகை அறிவித்தலின் பின் 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விடத்து அது பற்றி பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரரிடமுள்ள விண்ணப்பப் படிவப் பிரதியின் மற்றும் பணம் கட்டிய பற்றுச்சீட்டின் ஒப்புதல் செய்யப்பட்ட படப் பிரதிகளையும் மற்றும் பதிவுத் தபால் செய்த பற்றுச்சீட்டையும் (வெளிப்பிரதேசத்திலிருந்து விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்தால் அனுமதி அட்டை அனுப்புவதற்கு வசதியாக தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு) தங்களது கோரிக்கையுடன் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும்.

8.3 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எழுத வேண்டும். பரீட்சார்த்தி தான் பரீட்சை எழுதும் முதல் நாளன்று தனது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படுவர். இவைகளை மீறும் பரீட்சார்த்திகளை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக இடமுண்டு.

9. **பரீட்சையின் மொழி**.- பரீட்சை சிங்களம்/தமிழ் /ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சை எழுதும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.1 ஒரு பரீட்சார்த்தி ஆங்கில வினாத்தாளைத் தவிர்த்து மற்றைய எல்லாப் பாடங்களையும் ஒரே மொழிலேயே எழுத வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குகின்றமைக்கான தண்டனை**:

10.1 பரீட்சார்த்தி ஒருவர் தனது அறிவின்படி சமர்ப்பித்த ஏதாவது விபரங்கள் தவறானது என்று கண்டுபிடிக்கப்படுமிடதது அல்லது வேண்டுமென்றே ஏதாவது தேவைப்படும் தகவலை மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளதுடன் இதன் காரணமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தகுதியற்றவராவார்.

10.2 பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக்கு முன்போ பரீட்சை நடக்கும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அனுமதி அட்டை வழங்குதல் என்பது ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர் என்பதாக அமையாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாள அத்தாட்சி**:

11.1 ஒரு பரீட்சார்த்தி தனது பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது அடையாளத்தை அவர் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் நிரூபிக்கும்படி வேண்டப்படுவர். அதற்கமைய கீழே தரப்படும் ஏதாவதொரு அடையாளச் சான்று போதுமானதாகும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு.

பாலித ரீ. பீ. கொஹோன,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
'குடியரசுக் கட்டிடம்',
த.பெ. இல. 583,
கொழும்பு 01.
2009.03.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2009**

**Application to the Competitive Examination for filling Vacancies in the Public Management Assistants' Service Cadre in Sri Lanka Missions Abroad - 2009**

பகுதி அ
[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சார்த்தி பரீட்சை எழுத விரும்பும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
[ ]
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும்)

1.0 பெயர் :-
1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதாரணம் சில்வா எம். ஏ. :-----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.0 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
(அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்).

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
தொலைபேசி இல. :-----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :-----.
தொலைபேசி இல. :-----.

3. பால் :
பெண் - 1
ஆண் - 0
[ ]
(உரிய இலக்கத்தைப் குறிப்பிடவும்.)

3.1தேசிய அடையாள அட்டை இலக்கம் :- [ | | | | | | | | | ]

3.2பிறந்த திகதி :-
ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி: [ | ]

3.3விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-
வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. சேவை: (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/ உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை) அவசியமற்றவற்றை கீறி விடவும் :-----.

4.1 முதல் நியமனத் திகதி :-----.
அரசாங்க சேவை/மாகாண அரச சேவை/உள்ளூராட்சி அரச சேவை
(அவசியமற்றவற்றை கீறி விடவும்.)

4.2 சேவையில் சேர்ந்த மொழி :-----.

5. திருமணமானவரா/ திருமணமாகாதவரா?:-
திருமணமானவர் -2 /திருமணமாகாதவர் - 1)
[ ]
(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் இடவும்.)

5.1 திருமணமானவராயின் பிள்ளைகளின் எண்ணிக்கை, பிறந்த திகதி, அவர்களின் வயது :-----.

6. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் விபரம் தரவும் :----.

7. கல்வித் தகைமைகள் : (மொழி மூல விபரத்துடன்) :-----.

8. உயர்வு பெற்ற திகதி :-
8.1வகுப்பு II
8.2வகுப்பு I

8.3 விண்ணப்பதாரர் தற்பொழுது சேவையில் இருக்கும் வகுப்பு மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதி :-----.

9. தற்போதைய வருடாந்த சம்பளம் :-----.

10. அனுபவ அறிவு : (வருடங்கள் குறிப்பிடுக.) :-----.
10.1 கணக்கீடு :-----.
10.2 தாபன விதிமுறைகள் :-----.

11. மொழித் தேர்ச்சி :-----

| | வாசிப்பு | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| (அ) சிங்கள மொழி<br>(ஆ) தமிழ் மொழி<br>(இ) ஆங்கில மொழி<br>(ஈ) வேறு பிற நாட்டு மொழி | | | |

12. திறமை :

12.1 தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :-----.
12.2 கணனி அறிவு (விபரம் தரவும்) :-----.

13. விண்ணப்பதாரர் இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் முன்னர் சேவையாற்றியிருந்தால் திகதிகளுடன் தூதரகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

14. வேறு தகைமைகள் :-----.

1.பற்றுச் சீட்டு இலக்கம் :-----.
2.தபால் நிலையம் :-----.
3.திகதி :-----.
4.தொகை :-----.

**குறிப்பு**.- தபாலகத்தில் பணம் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டு இங்கு ஒட்டப்படல் வேண்டும்.

15. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

2009.04.24 ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலத்திற்கான சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளேன் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த எதுவித ஒழுக்காற்று தண்டனையையும் பெறவில்லை என்றும், இத்தால் உறுதிமொழிகின்றேன். அத்துடன் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். கொடுக்கப்பட்டுள்ள தகவல் ஏதாவது பரீட்சைக்கு முன்போ, அல்லது பின்போ தவறானது எனக் காணப்படுமிடத்து எனது விண்ணப்பத்தை அல்லது நியமனத்தை இரத்துச் செய்யக்கோரும் அதிகாரம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு உண்டு.

பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைந்து நான் செயற்படுவேன் என்றும், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ நான் தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து நான் பரீட்சையின் சட்டப்பிரமாண தீர்ப்புக்கமைந்து நடப்பேன் என்றும் உடன்படுகிறேன்.

-----.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

பகுதி - ஆ

(திணைக்களத் தலைவரால் நிரப்பப்படல் வேண்டும்)

வகுப்பு I/வகுப்பு II அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/ மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை/உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ள திரு./ திருமதி/ செல்வி ............... என்பவர்,

(அ) 2009.04.24 ஆந் திகதிக்கு முன்னரான 5 வருடங்களில் தனது சம்பள உயர்வுகள் அனைத்தையும் பெற்றுள்ளார் என்பதையும் ;

(ஆ) 2009.04.24 ஆந் திகதிக்கு முந்திய 5 வருட காலப்பகுதியில் எத்தகைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகவில்லை என்பதையும் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதை விசாரித்து அறிந்து கொண்டேன் என்றும்

இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

**சிபார்சு செய்தல்**.

(I) விண்ணப்பதாரர் வெளிநாட்டு தூதரகங்களில் சேவை செய்வதற்குரிய தகைமை.

(II) விண்ணப்பதாரர் தெரிவாகுமிடத்து அவரைத் தற்போதைய சேவையிலிருந்து தவறாது விடுவிக்க முடியுமா முடியாதா என்பது :

....................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

3-693

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.